**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா.9** **Date : 10.02.2026.**

| | |
|---|---|
| **Name : சண்முகம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1) நான் முழுமையாக விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். எனக்கு யார் முதலில் விபத்து குறித்து தகவல் சொன்னார்கள் என்றால் உதவி ஆய்வாளர் மாதையன் அவர்கள் சொன்னார். விபத்து நடந்த இடம் மேச்சேரி டூ ஓமலூர் ரோடு சந்திரமாள் கடை பஸ் ஸ்டாப் புக்கம்பட்டி பிரிவு ரோடு அருகில் நடந்தது. விபத்து நடந்த இடம் நான்கு வழி சாலை என்றால் ஆமாம். இரு புறத்திற்கும் நடுவில் divider உள்ளது என்றால் ஆமாம். ஆனால் சம்பவம் நடந்த இடத்தில் divider இல்லை.

2) சம்பவம் நடந்த இடம் மேச்சேரி டூ தொப்பூர் சாலை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. டிவைடரின் மொத்த உயரம் 5.5 அடி உயரம் உள்ளது என்றால் சரியல்ல. டிவைடரின் 4.5 சிமெண்டு மற்றும் 1 அடிக்கு தகரத்தால் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சந்திரம்மாள் கடை என்பது புக்கம்பட்டிக்கு செல்லும் சந்திப்பு ரோடு என்றால் ஆமாம்.

3) புக்கம்பட்டிக்கு செல்ல வேண்டுமானால் ஓமலூரிலிருந்து வரும் போது வலது கை பக்கம் திரும்பி சந்து வழியாக செல்ல வேண்டுமென்றால் ஆமாம். வரைபடம் நான் தான் தயாரித்தேன். வரைபடத்தில் விபத்து நடுரோட்டில் நடந்தது என்றால் ஓமலூர் மார்க்கமாக செல்லும் சாலையில் நடுவில் நடந்தது.

4) மகஜரில் உள்ளவை அடி கணக்கு என்றால் ஆமாம். 100 அடி தூரம் வரை உள்ள கட்டிடம் மட்டுமே வரைபடத்தில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். விபத்துக்குள்ளனா மோட்டார் சைக்கிள் வாகனம் யாருக்கு சொந்தமானது என்று தெரிந்து கொண்டேனா என்றால் பழனிவேல் என்பவருக்கு சொந்தமானது. சுரேஷ்குமார் என்பவர் தான் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் ஆமாம். அவர் இறந்த நபரின் மகன் ஆவார். சுரேஷ்குமாருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் ஆமாம்.

5) நான் சுரேஷ்குமாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் மோட்டார் வாகன ஆய்வாளரால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது என்றால் ஆமாம். இரு சக்கர வாகனம் இயக்க தெரியாத நபரால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தால் நான்கு வழி சாலையை எவ்வாறு கடக்க வேண்டுமென்ற அடிப்படை அறிவில்லாமல் அவரால் ஏற்பட்ட விபத்து தான் மேற்படி விபத்து என்றால் சரியல்ல. பொதுவாக இரு சக்கர வாகனத்தில் அமர்ந்து வாகனம் ஓட்டி வரும் போது 1 1/2 அடி குறைவாக உட்கார்ந்து வாகனம் ஓட்டும் சூழ்நிலை ஏற்படும் என்றால் சரிதான்.

6) இரு சக்கர வாகன ஓட்டுநர் எதிரில் வரும் வாகனங்களை பார்க்காமல் அவசரமாக சாலையை கடந்த போது விபத்து நடக்க வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. சாலையை கடந்த போது விபத்து நடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இனோவா காரின் டயர் மார்க் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ கார் ஓட்டப்பட்டிருந்தால் டயர் மார்க் சாலையில் பதியப்பட்டிருக்கும் அதை நான் வரைபடத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

7) அந்த இடத்தில் இரு சக்கர வாகனம் இழுத்து சென்றதாக எந்த கீறலும் சாலையில் இருந்ததாக Scene of occurrence ல் காட்டப்படவில்லை என்றால் சரிதான். இனோவா காரை அதிவேகமாக ஓட்டி வந்தால் 15, 20 அடிக்கு இரு சக்கர வாகனம் இழுத்து செல்லக்கூடிய சாத்தியக்கூறு ஏற்பட்டிருக்கும்

என்றால் சரியல்ல. என் விசாரணையில் இறந்த வளர்மதி கீழே விழுந்து மண்டையில் அடிப்பட்டு இறந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

8) ஒரு வேளை இனோவா வாகனம் அதிவேகமாக மோதியிருந்தால் தூக்கி எறிந்திருக்கப்படுவார் என்பதால் இனோவா வாகனம் அதிவேகமாக ஓட்டியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த வளர்மதியோ, இரு சக்கர வாகன ஓட்டியோ தலையில் தலைகவசம் அணிந்துவரவில்லை என்றால் ஆமாம். தலைகவசம் அணிந்திருந்தால் சுரேஷ்குமாரால் ஏற்பட்ட விபத்திலிருந்து இறந்த வளர்மதி காப்பாற்றப்பட்டிருப்பார் என்றால் சரியல்ல.

9) எதிரி மேற்படி இனோவா வாகனத்தை கவனத்துடன் இயக்கி வந்த நிலையில் சுரேஷ்குமார் தான் சாலை விதிகளை மதிக்காமல் இனோவா கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. உண்மையில் சுரேஷ்குமாரை தான் எதிரியாக காட்டியிருக்க வேண்டுமென்றும் இறந்த நபருக்கு காப்பீடு பெற்றுத் தர வேண்டி இனோவா கார் ஓட்டுநரான எதிரி மீது குற்றம் சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. Memo of evidence ல் 17 வது பத்தியில் இறந்த குஞ்சப்பன் பிரேதத்தை கைப்பற்றியதாக கூறப்பட்டுள்ளது என்றும் வளர்மதி பிரேதத்தை கைப்பற்றியதாக கூறப்படவில்லை என்றால் தட்டச்சு பிழையால் தவறு ஏற்பட்டுள்ளது.முதல் விசாரணையிலும் விபத்து நடந்த இடத்தை மேச்சேரி டூ தொப்பூர் சாலை என்று சரிவர குறிப்பிடவில்லை என்றும் இறந்த நபரின் பெயர் குஞ்சப்பன் என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.